**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**அனுப்புநர்**

**திரு செ.ம.வேலுசாமி**
**வணக்கத்திற்குரிய மேயர்,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி,**

**பெறுநர்**

**மதிப்பிற்குரிய துணை மேயர்,**
**நிலைக்குழு தலைவர்கள்,**
**நியமனக்குழு உறுப்பினர்,**
**வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்**
**அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி.**

**அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி.**

**சட்டமன்ற உறுப்பினர்கள்**
**(சிங்காநல்லூர் , கோவை தெற்கு,**
**கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்**
**கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு**
**சட்டமன்ற தொகுதிகள்),**

**பாராளுமன்ற உறுப்பினர்கள்**
**(கோவை , மற்றும் பொள்ளாச்சி**
**பாராளுமன்றத் தொகுதிகள்)**

**ந.க.எண் : 2859/ 2012 / எம்சி. 8 நாள் : 08.03.2012**

**அய்யா /அம்மா,**

**பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - 2012-13ம் நிதியாண்டிற்கான வரவு செலவு திட்ட அறிக்கை சமர்ப்பித்தல் - மாமன்ற சிறப்புக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.**

-----------

**கோயம்புத்தூர் மாநகராட்சியின் 2012-13ம் நிதியாண்டிற்கான வரவு செலவு திட்ட அறிக்கை தாக்கல் செய்யும் மாமன்ற சிறப்புக் கூட்டம் வருகின்ற 13.03.2012 செவ்வாய்கிழமை காலை 10.40 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.**

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**இணைப்பு : 1**

**/ உண்மைநகல் /**

**மாமன்ற செயலாளர்**

**நகல் :**

**ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி**
**துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி**

## மாமன்ற நிதிநிலை அறிக்கை - சிறப்புக் கூட்டம்
## மார்ச் 2012

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்** |
| **1** | கோயம்புத்தூர் மாநகராட்சி – வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் ஆரம்பக் கல்வி நிதி - 2011-2012 ம் ஆண்டு திருத்திய மதிப்பீடு மற்றும் 2012-2013ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீடு - ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்ட நிதிக்கான வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தல் - மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக. |

**நன்றியுரை**

அ) **திருக்குறள்**

**ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை**
**போகாறு அகலாக் கடை.**

**(குறள் -478)**

**விளக்கம்**

**வருவாய் ஓர் அளவுக்குள் இருக்கும்போது செலவினங்களை விரிவுபடுத்தாது கட்டுப்பாட்டில் வைப்பதே அறிவுடைமை.**

**திருவள்ளுவர்.**

---

**ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.**

## பொருள் எண் 1

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – வருவாய் மற்றும் மூலதனநிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் ஆரம்பக் கல்வி நிதி - 2011-2012ம் ஆண்டு திருத்திய மதிப்பீடு மற்றும் 2012-2013 ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீடு - ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்ட நிதிக்கான வரவு செலவு அறிக்கை – அனுமதி வேண்டுதல் - தொடர்பாக

--------------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் ஆரம்பக் கல்வி நிதிகளின் 2011-2012 ம் ஆண்டு திருத்திய மதிப்பீடும், 2012-2013 ம் ஆண்டிற்கான திட்ட வரவு செலவு திட்ட மதிப்பீடும், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்திற்கான வரவு செலவு அறிக்கையும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மானம் எண். 93 நாள் 05.03.2012 ன் மூலம் ஒப்புதல் அளித்துள்ளது.

எனவே 2011-2012 ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடும், 2012-2013 ம் ஆண்டிற்கான திட்ட வரவு செலவு திட்ட மதிப்பீடும், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்திற்கான வரவு செலவு அறிக்கையும் மாமன்ற அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 13/2012/பி-1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 274 நாள் 13.03.2012</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**(ஒப்பம்) செ.ம.வேலுசாமி**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**